# செங்கல்பட்டு மாவட்டம்
## இரண்டாம் மதிப்பீட்டுத் தேர்வு - 2022
## தமிழ்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் - 100

குறிப்புகள்: (1) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
(2) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I
(மதிப்பெண்கள் : 15)

குறிப்பு : (1) அனைத்து வினாக்களுக்களுக்கும் விடையளிக்கவும்
(2) கொடுக்கப்பட்ட நான்கு விகைளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக் கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -
அ) இலையும் சருகும் ஆ) தோகை யும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் -
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
3. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்
4. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
5. ”உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்” -பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
6. 'பெரிய மீசை ' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
7. விளியுடன் வினை தொடர்வது ---- ஆகும்.
அ) அடுக்குத் தொடர் ஆ) எழுவாய்த் தொடர்
இ) வேற்றுமைத் தொடர் ஈ) விளித்தொடர்
8. கச்சல் என்பது பின்வருவனவற்றுள் எது?
அ) மாம்பிஞ்சு ஆ) எள்பிஞ்சு
இ) இளம்பாக்கு ஈ) வாழைப்பிஞ்சு
9. எழிலன் படித்தான் என்பது.......மொழி
அ) தொடர்மொழி ஆ) தனிமொழி
இ) பொதுமொழி ஈ) மூவகைமொழி
10. மூவிடங்களிலும், முக்காலத்திலும் வரும் பெயர்.......
அ) சினைப்பெயர் ஆ) தொழிற்பெயர்
இ) காலப்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்
11. 'பிராண ரஸம்' என்பதன் பொருள்......
அ) உயிர்வளி ஆ) பழச் சாறு
இ) உயிர்வலி ஈ) துன்பம்

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13 14, 15) விடைதருக

உந்தி உணர்வெழும்ப உள்ளக் கனல் மூளச்
செந்தாமரைத் தேனைக் குடித்து சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித் தமிழே!

12.தும்பி என்பதன் பொருள்

அ) வண்டு ஆ) சிறகு இ) மயில் ஈ) வானம்

13.உந்தி உணர்வெழும்ப உள்ளக் கனல் மூள - இவ்வடியில் காணும் நயம்

அ) மோனை ஆ) எதுகை இ) முரண் ஈ) இயைபு

14.தும்பி எதன் தேனைக் குடித்தது?

அ) பூக்களின் ஆ) செந்தாமரை இ) முல்லை ஈ) ரோஜா

15.எதற்காக முந்துற்றோம்?

அ) தனித்தமிழ் முழங்க ஆ) செல்வம் சேர்க்க இ) பாடல் இசைக்க ஈ) தும்பி பிடிக்க

## பகுதி - II
## (மதிப்பெண்கள் : 18)
### பிரிவு - I

**குறிப்பு:** எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
21 வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும். 4x2=8

16.விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

(அ) மொழி ஞாயிறு என்று அழைக்கப்படுபவர் தேவ நேயப் பாவாணர்.
(ஆ) பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை.மாணிக்கம்.

17.ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன .
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன .
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன .
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

18."மன்னும் சிலம்பே! மணிமே கலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ் த்துவமே!" – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

19.வசன கவிதை குறிப்பு வரைக.

20.தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக; தொடரில்அமைக்க.

21.“முயற்சி” என்று தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - II

**குறிப்பு:** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5X2=10

22.கலைச்சொல் தருக. (அ) Tempest (ஆ) Discussion

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளிகளுக்கான மாற்று வினா.
கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களை எழுதுக. (ஆ) ஆடு (ஆ) புல்

23.எண்ணுப்பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.

| செய்யுள் அடி | எண்ணுப் பெயர் | தமிழெண் |
|---|---|---|
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | | |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | | |

24.'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார் ' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

25.பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

26.குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க. (அ) காப்பியச் சுவை (ஆ) மனிதகுல மேன்மை

27.சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
தேன், மணி, மழை, விலங்கு, மேகலை, பொன்

28.'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.



Padasalai.Net

# பகுதி III
## (மதிப்பெண்கள் - 18)
## பிரிவு - I

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்** 2X3=6

29.உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி

இளஞ்சிவப்பாக வறுத்த, பாதி உடைத்த பருப்பும் பச்சை அரிசியும் பானையில் கொப்புளமிட்டுக் கொதிக்க, மென் துணியில் வடிகட்டிய வெல்லக் கரைசல் நார்ப்பாகு பதத்தில் வெந்த பொங்கலுடன் கலக்கின்றது. உலர்ந்த திராட்சைகள் பசு நெய்யில் தங்கமென ஊதி உருண்டு வர, பிறை போன்ற முந்திரிப் பருப்புகள் அதனுள் சேர்ந்து மின்னுகின்றன. காற்றெங்கும் பால் கலந்த இனிப்பின் வாசம்.இனி, இடித்த ஏலக்காய் தூவ, எல்லாமும் பொங்கலுடன் இணைந்து குழைய, இந்தச் சர்க்கரைப்பொங்கலின் தித்திப்பு திகட்டாது. நறுக்கிய ஈர வாழையிலையில் ஒரு அகப்பை சுடும் பொங்கலிட,அது விழுந்தெழுப்பும் மணம், அறுவடையின் மகிழ்வு அது!

(அ) மென் பாகு எதனுடன் கலக்கின்றது?
(ஆ) எவை மின்னுகின்றன?
(இ) அறுவடையின் மகிழ்வு எது?

30.மரத்தின் அடிப்பகுதியிலிருந்து பிரிந்து செல்லும் பகுதிகளுக்கு வழங்கப் படும் பெயர்கள் யாவை?

31.'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'. இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

## பிரிவு - II

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்**
**34 வது வினாவிற்கு கட்டடாயமாக விடையளிக்கவும்.** 2X3=6

32.தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33.'மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா' - என்ற பாடல் அடிகளில்
(அ) அடிமோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
(ஆ) பாரதியார் எதனை வாசனையுடன் வரச் சொல்கிறார்?
(இ) சுமந்து கொண்டு - என்ற சொல்லைக் கொண்டு தொடர் ஒன்றை அமைக்க.

34.அடிபிறழாமல் எழுதுக.
'அன்னை மொழியே' எனத் தொடங்கும் பாவலேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்.

## பிரிவு -III

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்** 2X3=6

35.வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு. - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

36.'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!' - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

37.தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த்தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். - இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

பகுதி - IV
(மதிப்பெண்கள் 25)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5X5=25

38.நயம் பாராட்டுக.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

- கா.நமச்சிவாயர்

(அல்லது)

மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

39.கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு காலத்தில் உங்கள் நேரத்ததை எவ்வறு பயனுற கழித்தீர்கள் என்பதை நண்பனுக்கு விவரித்துக் கடிதம் எழுதுக.

(அல்லது)

மாநில அளவில் நடைபெற்ற “மரம் இயற்கையின் வரம்” எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40.தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.

அண்ணன் : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி )
தம்பி :----------------------- (தனிமொழி)
அண்ணன் : ---------------------வாங்குகிறாய்? (தொடர்மொழி)
தம்பி :------------------(தொடர்மொழி)
அண்ணன் : ---------------------(தனிமொழி)
தம்பி : ------------ (தொடர்மொழி)
அண்ணன் :------------------
தம்பி :------------------------

41காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



______________________
______________________
______________________
______________________
______________________

42. மொழிபெயர்க்க.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான வினா.

**ஊரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக**

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை , அதன் வழவழப்பை , கடுப்பு மணத்தை , சோறா குமுன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சிவெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும்.விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது.

அ) புழங்கல் அரிசி எவ்வாறு உருவாக்கப் படுகிறது?

ஆ) பகலில் உண்ணும் சோறு எது?

இ) நீரில் ஊறம் சோறு எது?

(அல்லது)

"தம்பி.. உனக்குப் பிடிச்ச காய் சொல்லு?" - "கேரட்"
"பிடிச்ச பழம்?" - "ஆப்பிள்"
பிடிச்ச காலை உணவு? - "நூடுல்ஸ்"
"மத்தியானத்துக்கு" - "ஃப்ரைடு ரைஸ்"
"ராத்திரி...?" - "பீட்ஸா அல்லது பாஸ்தா"

இது ஏதோ ஆங்கிலப்படத்தின் வசனம் அல்ல." சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர் என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டுமொத்த இளையதலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும் சாம்பார்சாதமும் கத்தரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில், 'ஆம்,காணாமல் போய்விடும்'! உங்கள் குழந்தைகள், "ஆடு, மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச்சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும்! மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

## பகுதி - V

(மதிப்பெண்கள் - 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

41.(அ) தமிழின் சொல்வ ளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) தொகா நிலைச் சொற்களின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விவரி.

42.(அ) அன்னமைய்யா என்னும் பெயருக்கும். அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்'கதைப் பகுதி கொண்டு விவாதிக்க.

(அல்லது)

(ஆ) 'காற்றே வா'கவிதையில் பாரதியார் கூறுவன யாவை?

43.(அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - உழவுத் தொழில் - உழவர் - உழவுத் தொழிலின் இன்றியமையாமை - உழவர்களை மதித்தல் - உணவினை வீணாக்காமல் உண்ணுதல் - முடிவுரை

(அல்லது)

(ஆ) முன்னுரை - சாலைப் பாதுகாப்பு - உயிரி பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஒட்டுநருக்கான நெறிகள் - விபத்தினைத் தவிர்ப்போம்! விழிப்புணர்வு தருவோம்! - முடிவுரை.